**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8167284

1. District : மாவட்டம் திருவள்ளூர் PS: காவல்நிலையம் V&AC., Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 05/2024 Date: நாள் 20.05.2024

2. (i) Act சட்டம்: Ipc Sections பிரிவுகள்: 120(b),420,409,465,
 (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 468,471,477(A)Ipc,
 (iii) Act சட்டம்: ஊழல் தடுப்புசட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) &
 (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 13(1)(d) ஊழல் தடுப்புசட்டம் 1988

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2016முதல் Date to : நாள் வரை 2019 வரை
 Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
 (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.04.2022 Time : நேரம் —
 (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.05.2024 Time : நேரம் 16.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் வடகிழக்கு, 60 kms
 Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சாணாபுத்தூர் ஊராட்சி, திருவள்ளூர் மாவட்டம்
 (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. மாலா. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. சேகர்
 (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
 Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
 (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
 தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

 தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
 குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

 PE NO. 36/2022/RDP/KM-ன்படி மேல்விசாரணை
 விசாரணை நடத்தப்பட்டு

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......Tmt. G.S. Tamizharasi...... Rank ......Inspector of police, VAC, Thiruvallur...... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 20/5/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S. Mala 20/05/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.05.2024
at 18.00 hrs.

Name: பெயர் ......S. MALA......
Rank: நிலை ...................No. எண் ......
Inspector of Police, VAC, Thiruvallur.

திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் **5/AC/2024/TVL, U/s** Sec.120B, 420,409,465,468,471,477(A) IPC and 13(2) r/w 13(1)(c) and 13(1)(d) of The Prevention of Corruption Act 1988 வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவர்களின் விவரம்:-

1. திரு.பிர்லா த/பெ சுப்ரமணி, முன்னாள் ஊராட்சி செயலர், சாணாபுத்தூர் ஊராட்சி, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

2. திரு.S.ராஜேந்திரன் த/பெ.சீனிவாசன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

3. திரு.K.ரவி த/பெ கதிர்வேல், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

4. திரு.B.அருள் த/பெ பாலசுப்ரமணியன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

5. திரு.A.சந்திரசேகர் த/பெ கங்காதரன், முன்னாள் மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

6. திரு.M.நரசிம்மன் த/பெ மீனாட்சிசுந்தரம், முன்னாள் ஒன்றிய பொறியாளர், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

7. திரு.M.S.சதாசிவம் த/பெ ஜெயராமன், முன்னாள் ஒன்றிய பொறியாளர், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

8. திரு.N.கோவிந்தராஜ் த/பெ நாகப்பன், முன்னாள் ஒன்றிய பொறியாளர், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

**(12. Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.5/AC/2024/TVL, U/s** Sec.120B, 420,409,465,468,471,477(A) IPC and 13(2) r/w 13(1)(c) and 13(1)(d) of The Prevention of Corruption Act 1988 **Continuous.....)**

பணிந்து அனுப்பப்படுகிறது:-

திருவள்ளூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் அனுப்பிய விழிப்புணர்வு அறிக்கையின் அடிப்படையில் இயக்குனர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம் சென்னை அவர்களின் அலுவலக குறிப்பாணையின்படி, முதல்நிலை விசாரணை நடத்த உத்தரவிட்டதன்படி, முதல் நிலை விசாரணை PE.39/2022/RDP/KM பதிவு செய்யப்பட்டு, விழிப்புணர்வு அறிக்கையில் சொல்லப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் மீது, விசாரணை அலுவலரான திருமதி.சுமத்ரா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசாரணை முடிவில் குற்றச்செயலுக்கான முகாந்திரம் உள்ளது தெரியவந்துள்ளதால், குற்ற வழக்கு பதிவு செய்ய தகுந்த அலுவலரிடம் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன் மார்ஜினில் கண்ட எதிரிகளான: (A1) திரு.பிர்லா த/பெ சுப்ரமணி, ஊராட்சி செயலர், சாணாபுத்தூர் ஊராட்சி, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (10.04.1997 முதல் 06.10.2021 வரை பணிபுரிந்துள்ளார்), (A2)திரு.S.ராஜேந்திரன் த/பெ சீனிவாசன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (19.01.2017 முதல் 18.09.2017 வரை பணிபுரிந்துள்ளார்), (A3) திரு.K.ரவி த/பெ கதிர்வேல், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ) கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (16.03.2018 முதல் 19.02.2019 வரை பணிபுரிந்துள்ளார்), (A4) திரு.B.அருள் த/பெ பாலசுப்ரமணியன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (22.08.2019 முதல் 11.12.2019 வரை பணிபுரிந்துள்ளார்), (A5) திரு.A.சந்திரசேகர் த/பெ கங்காதரன், முன்னாள் மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ),கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (04.01.2016 முதல் 19.09.2018 வரை பணிபுரிந்துள்ளார்), (A6) திரு.M.நரசிம்மன் த/பெ மீனாட்சிசுந்தரம், முன்னாள் ஒன்றிய பொறியாளர், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (26.07.2017 முதல் 31.03.2020 வரை பணிபுரிந்துள்ளார்), (A7) திரு.M.S.சதாசிவம் த/பெ ஜெயராமன், முன்னாள் ஒன்றிய பொறியாளர், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (22.09.2016 முதல் 04.12.2019 வரை பணிபுரிந்துள்ளார்) மற்றும், (A8) திரு.N.கோவிந்தராஜ் த/பெ நாகப்பன், முன்னாள் ஒன்றிய பொறியாளர், கும்மிடிப்பூண்டி

ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் (06.12.2019 முதல் பணிபுரிந்து வருகிறார்) அனைவரும் சட்டப்பிரிவு 2(c) ஊழல் தடுப்பு சட்டம், 1988 ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம் (ஊரகம்) ஆனது Social Economic and Caste Census –2011 (SECC-2011-யின் தரவுகளின்படி குடிசை சுவர் மற்றும் குடிசை கூரையுடன் கூடிய ஒன்று அல்லது இரண்டு அறைகள் கொண்ட வீட்டில் வசிக்கும் மற்றும் வீடற்ற குடும்பங்களுக்கு 2016/17 ஆம் ஆண்டு 144 வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி வீடுகள் ஒதுக்கீடு சம்மந்தமாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அவர்களின் அலுவலக எண் Rc.No.21030/2016/RHS-2.1, Dated.01.12.2016-ன்படி PMAY-G திட்டத்தின் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக, சமூக பொருளாதார மற்றும் சாதி மக்கள் தொகை கணக்கெடுப்பு (SECC) 2011 பட்டியலின்படி கிராம சபையால் சரிபார்க்கப்பட்டு 60% இலக்கு SC/ST க்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும், நிலமற்ற பயனாளிகளுக்கு மேற்குறிப்பிட்ட வகைகளைப் பொறுத்தமட்டில் பொதுவான நிலத்தை ஒதுக்குவதற்கு கிராம பஞ்சாயத்துகள் உதவலாம் என்றும் வழிகாட்டுதல்கள் நிர்ணயிக்கப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், சாணாபுத்தூர் ஊராட்சியில் 2016-2017 முதல் 2019-2020 வரை PMAY-G திட்டத்தின் கீழ் 144 வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு மொத்த தொகையாக Rs.1,70,000/- ஒதுக்கப்பட்டது. அதில் Rs.1,20,000/-ல் 60% (Rs.72,000/-) மத்திய அரசு நிதியிலிருந்தும், 40% (Rs.48,000/-) மாநில அரசு நிதியிலிருந்தும் ஒதுக்கப்பட்டு மீதமுள்ள தொகையான Rs.50,000/- மாநில அரசு கூடுதலாக கொடுக்கிறது. அந்த தொகைகளை எவ்வாறு விடுவிக்க வேண்டும் என்று கீழ் கண்ட அட்டவணையில் உள்ளது:

| தொகை வழங்கப்படும் விவரம் | பொது நிதி மேலாண்மை அமைப்பு மூலம் வழங்கப்படும் தொகை | RCC கூரை வரையிலான நிலைக்கு வழங்கப்படும் மாநில நிதி | கூரை வரையிலான தொகையிலிருந்து பொருட்களுக்கு வழங்கப்படும் மாநில நிதி. | பயனாளிகளுக்கு வழங்கப்படும் நிகர தொகை |
|---|---|---|---|---|
| (a) | (aa) | (e) | (ee) | (u) |
| முதல் தவணை | 26029 | 3,187 | 4,901 | 34,117 |
| இரண்டாவது தவணை | 26715 | 2,670 | 4,705 | 34,090 |
| மூன்றாவது தவணை | 26681 | 1,162 | 19,183 | 47,026 |
| இறுதி தவணை | 40575 | 10,075 | 4,117 | 54,767 |
| Total | 1,20,000 | 17,094 | 32,906 | 1,70,000 |

இதில் வட்டார வளர்ச்சி அலுவலரின் பணியானது, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிடைக்கும் பதிவுகளின் அடிப்படையில் பயனாளிகளின் உண்மை தன்மையை சரிப்பார்த்தல் மற்றும் அனுமதி வழங்குவதற்கு முன் தேவைப்பட்டால் கள ஆய்வு செய்ய வேண்டும். ஆவாஸ் சாஃப்ட் மற்றும் ஏற்கனவே உள்ள தளம் / முன்மொழியப்பட்ட தளம் ஜியோ-டேக் செய்யப்பட்ட தளத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, பணிக்கான மின்-அனுமதி ஆர்டருக்கான முன்மொழிவை (கையொப்பமிடப்பட நகல்) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு (DRDA) அனுப்ப வேண்டும். பயனாளிகளுக்கு உத்தரவுகளை வழங்குதல். பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோருடன் கள ஆய்வு செய்து கிராம பஞ்சாயத்துகளில் நடைபெறும் பணிகளை கண்காணித்தல் வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO-VP) தனது தொகுதிக்கு அனுமதிக்கப்பட்ட 50% வீடுகளை ஆய்வு செய்யவேண்டும். ஆனால் இறுதி பில் தயாரிக்கப்பட்ட அனைத்து வீடுகளும் இறுதிப் பணம் செலுத்தவதற்கு முன் அவரால் பரிசோதிக்கப்பட வேண்டும்.

துணை வட்டார வளர்ச்சி அலுவலரின் பணியானது மண்டலத்தில் ஒதுக்கப்பட்ட வீடுகளை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் 100% ஆய்வு செய்ய வேண்டும் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அளவீட்டு புத்தகத்தை பராமரிக்க வேண்டும்.

உதவி பொறியாளர் பயனாளிக்கு ஒதுக்கப்பட்ட வீடு எந்த நிலையில் கட்டப்பட்டுள்ளது என்பதை உதவி பொறியாளர் அளவீட்டு புத்தகத்தில் (மதிப்பீட்டு சான்றிதழ்) சான்றளிக்க வேண்டும்.

பணி மேற்பார்வையாளர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO-VP) பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கிய பிறகு, சம்பந்தப்பட்ட பணி மேற்பார்வையாளர், கிராம பஞ்சாயத்து செயலாளரின் உதவியுடன் நிலத்தின் உரிமையை சரிபார்த்த பிறகு கட்டுமானத்திற்காக நிலத்தில் குறியீடு செய்ய வேண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி கட்டுமானத்திற்கான பொருட்களை வாங்க வேண்டும். எனவே, வீட்டைக் கட்டுவதற்கான பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களின் அளவு ஆகியவற்றை பணி மேற்பார்வையாளர் பயனாளிக்கு வழிகாட்ட வேண்டும். கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை பணி மேற்பார்வையாளர் கண்காணித்து, அதை உறுதி செய்த பிறகு கட்டுமானத்திற்காக பயனாளிக்கு சிமெண்ட் வழங்குவது பணி மேற்பார்வையாளரால் செய்யப்பட வேண்டும். பணியின் முன்னேற்றம் பணி மேற்பார்வையாளரால் கண்காணிக்கப்பட வேண்டும் மற்றும் அதே நிலை வாரியாக பில்களை புகைப்படத்துடன் தயாரித்து, அதை எதிர் கையொப்பத்திற்காக சம்பந்தப்பட்ட உதவி பொறியாளருக்கு (AE/JE) அனுப்ப வேண்டும். பின்னர் பயனாளிக்கு பணம்

செலுத்துவதற்காக FTO-யை உருவாக்குவதற்காக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (BDO-VP) அனுப்பப்படவேண்டும். பணி மேற்பார்வையாளர் தனது அதிகார வரம்பில் உள்ள அனைத்து வீடுகளையும் 100% கள ஆய்வு செய்யவேண்டும்.

**பஞ்சாயத்து செயலாளரின் பங்கானது,** SECC தரவு / Awaas Plus-லிருந்து தகுதியான பயனாளிகளை அடையாளம் காண கிராம பஞ்சாயத்துக்கு உதவ வேண்டும். வீடு கட்டுவதற்கு தேவையான நிலத்தின் உரிமை மற்றும் இருப்பை குறிப்பிடுவதன் மூலம் பயனாளிகளின் தகுதியை உறுதி செய்வதில் கிராம பஞ்சாயத்துக்கு உதவ வேண்டும். பயனாளிகளின் ஆதார் எண், வங்கி கணக்கு, பட்டா நகல் இதர விவரங்களை சேகரிக்க வேண்டும். தகுதியான பயனாளிகளின் ஒப்புதலுக்காக கிராம சபை கூட்டத்தை கூட்டுவதற்கு கிராம பஞ்சாயத்துக்கு உதவுதல் மற்றும் கிராம பஞ்சாயத்து தீர்மானத்தை செயல்படுத்துதல் வேண்டும். வங்கி பரிவர்த்தனைகள், கூடுதல் கடனை அனுமதித்தல் மற்றும் பயனாளிகளுக்கு பணம் செலுத்துதல் தொடர்பாக வங்கிக்கும் பயனாளிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படவேண்டும். பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்ப்பதற்காக விலக்கப்படுவதை சரிபார்ப்பதில் கிராம பஞ்சாயத்துக்கு உதவுதல் மற்றும் அதை உயர் அதிகாரிகளுக்கு அனுப்புதல் வேண்டும்.

கடந்த 2016 முதல் 2019 வரையான காலகட்டத்தில், உள்ளாட்சி தேர்தல் நடைபெறாததால் கிராம பஞ்சாயத்து தலைவர் பதவி காலியாக இருந்தது. கிராம பஞ்சாயத்து நிர்வாகம் கிராம பஞ்சாயத்து செயலாளருக்கு வழங்கப்பட்டது. அவர்கள் நேரடியாக வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் (BDO) அனைத்து நிர்வாக அலுவல்களையும் சமர்ப்பித்தனர். மேலும், திட்டங்களும் பஞ்சாயத்து செயலாளர்கள் மூலம் பயனாளிகளை சென்றடைந்துள்ளது.

மேற்படி 144 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக முதல்நிலை விசாரணை மேற்கொண்டதில் 45 பயனாளிகளுக்கு, 1) தொகுப்பு வீடுகள் கட்டப்படாமலேயே தொகுப்பு வீட்டிற்கான முழு தொகையை வழங்கியும் 2) ஏற்கனவே தொகுப்பு வீடு திட்டத்தின் கீழ் வீடு பெற்றுள்ள பயனாளிகளுக்கு மீண்டும் வீடு ஒதுக்கீடு செய்தும் மற்றும் வீடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை, தொடர்பில்லாத நபர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பியும் முறைகேடாக செயல்பட்டதில் மொத்தம் ரூ.31,66,185/- (2016-2017-ஆம் ஆண்டில் ரூ.4,17,836/-, 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.17,35,355/- மற்றும் 2018-2019 ஆம் ஆண்டில் ரூ10,12,994/-) குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என தெரிய வந்துள்ளது.

2016 முதல் 2019 வரை ஊராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் வட்டார வளர்ச்சி அலுவலர் (தனி அலுவலர்) அவர்களின் கட்டுப்பாட்டில் தான் மேற்க்கொள்ளப்பட்டது. கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம். சாணாபுத்தூர் ஊராட்சியில். ஊராட்சி செயலராக பணிபுரிந்த குற்ற அலுவலர்-1 திரு.பிர்லா அளித்த பொய்யான ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில். கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரிந்த குற்ற அலுவலர்கள் 2 முதல் 8 வரையானவர்கள் PMAY-G திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை கள ஆய்வு ஏதும் செய்யாமல் போலியான Geotag எடுத்து Awaas Soft செயலியில் பதிவு செய்துள்ளனர் என்பதும். குற்ற அலுவலர்கள் 2 முதல் 8 வரையானவர்கள் குற்ற அலுவலர்-1 உடன் இணைந்து 45 பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கியதிலும். வீடுகள் தொடர்பான அளவீடுகள் செய்வதிலும் முறைகேடாக செயல்பட்டு பணம் ரூ.31,66,185/- கையாடல் செய்துள்ளனர் என தெரியவருகிறது.

எனவே. குற்ற அலுவலர்கள் (A1) திரு.பிர்லா த/பெ சுப்ரமணி. முன்னாள் ஊராட்சி செயலர். சாணாபுத்தூர் ஊராட்சி. (A2) திரு.S.ராஜேந்தரன் த/பெ.சீனிவாசன். முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ). (A3) திரு.K.ரவி த/பெ கதிர்வேல், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), (A4) திரு.B.அருள் த/பெ பாலசுப்ரமணியன். முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ). (A5) திரு.A.சந்திரசேகர் த/பெ கங்காதரன். முன்னாள் மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ). (A6) திரு.M.நரசிம்மன் த/பெ மீனாட்சிசுந்தரம். முன்னாள் ஒன்றிய பொறியாளர், (A7) திரு.M.S.சதாசிவம் த/பெ ஜெயராமன். முன்னாள் ஒன்றிய பொறியாளர் மற்றும் (A8) திரு.N.கோவிந்தராஜ் த/பெ நாகப்பன், முன்னாள் ஒன்றிய பொறியாளர் ஆகியோர்கள் 120(b),420,409,465,468,471,477(A) IPC மற்றும் 13(2) r/w 13(1)(c) & 13(1)(d) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன் படி குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரவின் படி இன்று 20.05.2024 ஆம் தேதி 16.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் குற்ற எண் சட்டப்பிரிவுகள் 120(b), 420, 409, 465, 468, 471, 477(A) IPC மற்றும் 13(2) r/w 13(1)(c) & 13(1)(d) ) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன் படி குற்ற வழக்கு பதிவு காவல் ஆய்வாளர் S.மாலா ஆகிய என்னால் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல். தலைமை குற்றவியல் நீதத்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்கு). திருவள்ளூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும். ஒரு நகல் வழக்கு கோப்பிலும் வைக்கப்பட்டது.

S. Mala
20/05/2024
INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.